# முன்கூட்டியே பராமரிப்பைத் திட்டமிடுதல்

## உங்கள் சுகாதார, தனிப்பட்ட பராமரிப்புக்குத் திட்டமிடுங்கள்

### ஏ.சி.பி என்றால் என்ன?

உங்கள் வருங்கால சுகாதார, தனிப்பட்ட பராமரிப்புத் தேவைகளுக்குத் திட்டமிடுவதே, முன்கூட்டியே பராமரிப்பு திட்டமிடல் ஆகும்.

நீங்கள், உங்களுடைய சிகிச்சை பற்றித் தொடர்புகொள்ள அல்லது முடிவுகள் எடுக்க இயலாத அளவுக்கு நோய்வாய்ப்பட்டால், உங்கள் மருத்துவக் குழுவும், உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியும் உங்களது சிறந்த நலன்களின் பேரில் முடிவெடுக்க, முன் கூட்டியே பராமரிப்பைத் திட்டமிடுதல் கைகொடுக்கும்.

### ஏன் ஏ.சி.பி முக்கியம்?

- நீங்கள், உங்கள் வருங்கால பராமரிப்புக்காகவும் சிகிச்சைக்காகவும் ஒரு திட்டத்தை வகுத்துக்கொள்கிறீர்கள்.
- மருத்துவப் பிரச்சினை ஒன்று ஏற்படும்போது, நீங்கள் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு ஏற்படக்கூடிய மன உளைச்சலைக் குறைக்கமுடியும்.
- பராமரிப்பு, சிகிச்சை ஆகியவை தொடர்பிலான உங்கள் விருப்பங்கள் கூடுமானவரை நிறைவேற்றப்படும்.

நோயாளி ஒருவர் தமக்கு ஏற்பட்ட நோயின் காரணமாக, தமது எண்ணங்களையும் விருப்பங்களையும் வெளிப்படுத்த இயலாது.
**மருத்துவர், நோயாளியின் குடும்பத்தினரிடம் அவர் விரும்பக்கூடிய சிகிச்சைகள் பற்றிக் கேட்டறிவார்.**

### சூழ்நிலை 1

அவருக்கு ACP கிடையாது. அவர் தமது பராமரிப்பு விருப்பங்கள் தொடர்பில் தமது குடும்பத்தினருடன் எதுவும் பகிர்ந்துகொள்ளவில்லை.



**அவரது விருப்பங்கள் பற்றி யாருக்கும் தெரியாது.**
அவரது விருப்பங்களும் எண்ணங்களும் அவரது சிகிச்சையில் பிரதிபலிக்கப்படமாட்டா.



### சூழ்நிலை 2

முன்னதாக அவர் தமது ACP-யை உருவாக்கியுள்ளார். அவர் தமது பராமரிப்பு குறித்த விருப்பங்களைத் தமது குடும்பத்தினரிடம் பகிர்ந்துகொண்டார்.



**அவரது குடும்பத்தினருக்கும் சுகாதாரப் பராமரிப்புக் குழுவினருக்கும் அவருடைய விருப்பங்கள் பற்றித் தெரியும்.**
அவரது விருப்பங்களும் எண்ணங்களும் அவரது சிகிச்சையில் பிரதிபலிக்கப்படும்.



# ஏ.சி.பி  எவ்வாறு திட்டமிடுவது?





## 1 உங்களுக்குத் தேவையானவை குறித்து எண்ணிப் பாருங்கள்

உங்களுக்குத் தேவையான வாழ்க்கைத் தரம் பற்றியும், நீங்கள் சௌகரியமாகக் கருதக்கூடிய மருத்துவ சிகிச்சை பற்றியும் எண்ணிப் பாருங்கள்.

## 2 உங்களது நியமிக்கப்பட்ட சுகாதாரப் பராமரிப்புப் பேச்சாளரைத் தெரிவு செய்யுங்கள்

உங்களது நியமிக்கப்பட்ட சுகாதாரப் பராமரிப்புப் பேச்சாளர், உங்களது பராமரிப்பு விருப்பங்கள் பற்றி நீங்கள் முடிவெடுக்க இயலாத நிலையில், முடிவெடுக்கக்கூடியவராக, உங்களது நம்பிக்கைக்கு உரியவராக இருக்கவேண்டும். வழக்கமாக, அந்த நபர், ஒரு குடும்ப உறுப்பினர் அல்லது நெருங்கிய நண்பராக இருப்பார்.





## 3 உங்கள் தெரிவுகளைக் குறித்துக்கொள்ளுங்கள்

ஏ.சி.பி  அதிகாரி ஒருவரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து, முன் கூட்டியே திட்டமிடப்பெறும் உங்கள் பராமரிப்புத் திட்டத்தில், உங்கள் தெரிவுகளை குறித்துக்கொள்ளுங்கள்.

***இந்த விரைவுத் தகவல் குறியீட்டின் வழி ஏ.சி.பி அதிகாரியை தேடுங்கள்**

## 4 முன்கூட்டியே திட்டமிடப்படும் உங்கள் பராமரிப்புத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யுங்கள்

முன்கூட்டியே திட்டமிடப்படும் உங்கள் பராமரிப்புத் திட்டம், உங்களைப் பிரதிபலிக்கும். உங்கள் வாழ்க்கை மாறும் வேளையில், நீங்கள் புதிய முடிவுகளை எடுக்கக்கூடும். அவ்வாறு நீங்கள் புதிய முடிவுகளை எடுக்கும்போது, முன்கூட்டியே திட்டமிடப்படும் உங்கள் பராமரிப்புத் திட்டத்திற்கும், உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் அவற்றைத் தெரியப்படுத்துங்கள்.

குறிப்பு: உங்கள் ஏ.சி.பி, வருங்கால மருத்துவ முடிவுகளை நிர்ணயிப்பது கிடையாது. வருங்காலத்தில், நீங்கள் மருத்துவ முடிவுகளை எடுப்பதற்கான ஆற்றலை இழந்துவிட்டால், உங்கள் மருத்துவக் குழு, முன்கூட்டியே திட்டமிடப்பட்ட உங்கள் பராமரிப்புத் திட்டத்தைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, உங்கள் அன்புக்குரியவர்களுடன் கலந்து ஆலோசித்து, உங்களது மிகச் சிறந்த நலனின் பேரில், முடிவுகளை எடுக்கும்.